**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calender : | Miscellaneous : | |
| Preliminary Register : | Case No. : | **S.C.30/2023** |
| Sessions : | | |

| | | |
|---|---|---|
| Deposition of witness for : | Prosecution : | **P.W. 3** |
| | Defence : | **D.W.** |
| | Court : | **C.W.** |

| | | | |
|---|---|---|---|
| **Name :** | வரதராஜன் என்கிற வரதராஜபெருமாள் | **S/o.** | அப்பாதுரை |
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **04.04.2025**

**1 முதல் 5 எதிரிகள் ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் நொச்சிக்குளத்தை சேர்ந்தவர். அப்பாதுரை எனது தகப்பனார். ஆஜர் எதிரிகள் எனக்கு தெரியும். 23.12.2015 அன்று மாலை பயிர் பாதுகாப்புக்காக எங்கள் நிலத்தில் கம்பிவேலி போட்டிருந்தோம். எங்கள் நிலத்திற்கு பின்னால் எதிரிகளின் நிலம் உள்ளது. எங்கள் கம்பிவேலியை கல்லுடன் மரவல்லிக்கிழங்கு போடப்பட்ட நிலத்தில் சாய்த்துவிட்டார்கள். இதுபற்றி நாங்கள் எதிரியிடம் கேட்டோம். நாங்கள் அப்படி தான் செய்வோம், அதுபற்றி கேட்ககூடாது உங்களை வெட்டிவிடுவோம்எ ன்று சொன்னார்கள். மறுநாள் 24.12.2015 அன்று எங்கள் நிலத்தில் மண்நிரவி இடத்தை ஆக்கிரமிப்பு செய்தார்கள். அதை நாங்கள் மறுபடியும் கேட்டோம். அதற்கு அவர்கள் எங்களுடைய நிலம் உள்ளது என்றும், நாங்கள் அப்படிதான் செய்வோம் என்றும் மீறி கேட்டால் வெட்டுவோம் குத்துவோம் என்று சொன்னார்கள் பிறகு நாங்கள் அரியலூர் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தோம். போலீசார் வந்து சம்பவ இடத்தை பார்த்தார்கள் அப்போது எதிரிகள் அங்கு தான் வேலை செய்து கொண்டிருந்தார்கள். போலீசார் அவர்களை கைது செய்து அழைத்து சென்றார்கள். போலீசார் என்னை

விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் என் அப்பாவால் கொடுக்கப்பட்டது தான் அது அ.த.சா.ஆ.1 ஆகும்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

என் அப்பா 24.12.2015 அன்று புகார் கொடுத்தார். கம்பிவேலியை உடைத்த அன்று நான் சம்பவ இடத்தில்இல்லை அன்று மாலை தான் போய் பார்த்தேன். என் அப்பா சம்பவம் நடந்ததை பற்றி என்னிடம் சொன்னார். என்னை 24.12.2015 அன்று காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். எதிரிகளுக்கும் எங்களுக்கும் சிவில் நீதிமன்றத்தில் வழக்கு நடக்கிறது என்றால் சரிதான். இந்த சம்பவத்திற்கு முன்பாக இருந்தே சிவில் வழக்கு நடக்கிறது. எங்களுக்கும் எதிரிகளுக்கும் உள்ள நிலப்பிரச்சனை சம்பந்தமாக உள்ள விரோதத்தின் காரணமாக என் அப்பாவிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சிவில் வழக்கு நடந்துகொண்டிருக்கும்போது தான் நாங்கள் கம்பிவேலி போட்டோம் என்றால் சரிதான். நான் போலீசிடம் எனது பெயரை வரதராஜபெருமாள் என்று தான் சொன்னேன். நான் சம்பவ இடத்திற்குபோகாமலேயே என் அப்பா சொல்லி என்னை அழைத்து இந்த வழக்கில் சாட்சியாக போட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், எதிரிகள் எங்கள் மீது சிவில் வழக்கு போட்டதால் நாங்கள் பொய்யாக புகார் கொடுத்து எதிரி மீது வழக்கு நடத்துகிறோம் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge
Perambalur.